## கேஎல்சிசி முன்புறம்

# சட்டவிரோதமாக சோள விற்பனை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்



கோலாலம்பூர், ஜன. 28- கேஎல்சிசி முன்புறமாகச் சோளங்களை வாட்டி விற்பனை செய்யும் அந்நியப் பிரஜை மீது ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தபோதிலும் அங்கு அந்நியப் பிரஜைகள் தொடர்ந்து அவ்வியாபரத்தை நடத்தி வந்தனர்.

இதனை அடுத்து கோலாலம்பூர் மாநகர் மன்ற அதிகாரிகள் அங்கு மீண்டும் அதிரடிச் சோதனை மேற்கொண்டனர்.

அந்நடவடிக்கையின் போது விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களும் உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

ஏற்கெனவே இதேபோன்ற நடவடிக்கை அங்கு மேற்கொள்ளப்பட்டது.

ஆயினும் அந்நியர்கள் அங்கு தொடர்ந்து சோள வியாபாரம் செய்துவந்ததால் மீண்டும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.